# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# யாழ்ப்பாணம்

## பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம்

**01.02.2015**

### செயலாளர் அறிக்கை

# யாழ்ப்பாண இந்துக் கல்லூரி
## யாழ்ப்பாணம்
## பழைய மாணவர் சங்கம்
## ஆட்சிக்குழு 2013 - 2014

**தலைவர் :-** வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன்

**செயலாளர் :-** திரு.கு.கௌதமன்

**பொருளாளர் :-** திரு. இ. குகானந்தன்

**உபதலைவர்கள் :-**
திரு.வீ.கணேசராஜா
(20.10.2013 முதல் 07.08.2014 வரை)
திரு.ஐ.தயானந்தராஜா 03.09.2014 முதல்

போராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வைத்தியகலாநிதி. பூ. லக்ஸ்மன்
வைத்தியகலாநிதி. தி. சிறிகரன்
வைத்தியகலாநிதி. சு. சிவபாதமூர்த்தி
கலாநிதி . கு. திருக்குமரன்

**உபசெயலாளர்:-** வைத்தியகலாநிதி. ப. நந்தகுமார்

**உபபொருளார் :-** திரு.செ. விநோத்குமார்

**ஆட்சிக்குழு உறுப்பினர் :-**
கப்டன் ந. சோமசுந்தரம்
பேராசிரியர். கா. குகபாலன்
திரு. C.K. விசாகரட்ணம்
திரு. வி. ஸ்ரீசக்திவேல்
திரு. கை.விக்னேஸ்வரன்
திரு.மு.கணேசராஜா
திரு. த. அருணகிரிநாதன்
திரு.பா. ஜெயரெட்ணராஜா
வைத்தியகலாநிதி இ.சுரேந்திரகுமார்
வைத்தியகலாநிதி வே.சுதர்சன்
வைத்தியகலாநிதி சிவாகரன்
வைத்தியகலாநிதி கார்த்திக்
திரு. வி.கேதீஸ்வரன்
திரு.ம.அருள்குமரன்

திரு. வே. ராஜேந்திரா
திரு. பொ. தயானந்தன்
திரு. வை. சுரேஸ்
திரு.கு.அமரேஸ்
திரு. கிருபாகரன்

ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. ம.அருள்குமரன் தொடர்ச்சியாக கூட்டங்கள் எதற்கும் சமுகமளிக்காமையால் அவருக்குப் பதிலாக திரு.கிருபாகரன் அவர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப் பட்டார்.

## உபகுழுக்கள்

**1. விளையாட்டுத்துறை உபகுழு**

திரு.த.அருணகிரிநாதன்
திரு. லி.கேதீஸ்வரன்
திரு.செ. விநோத்குமார்

**2. விடுதி உபகுழு**

பேராசிரியர். கா. குகபாலன்
வைத்திய கலாநிதி பூ. லக்ஸ்மன்
வைத்திய கலாநிதி ப. நந்தகுமார்
திரு. மு. கணேசராஜா

**3. முழுநிலாநாள் கருத்தரங்கு உபகுழு**

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
திரு. கு.அமரேஸ்

**4. யாப்பு சீர்திருத்த உபகுழு**

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர் கா. குகபாலன்
வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன்

இக்குழு மீளமைக்கப்பட்டு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா.குகபாலன் ஆகியோருக்குப் பதிலாக திரு.வை. சுரேஸ், திரு.வே.ராஜேந்திரா ஆகியோர் புதிதாக உள்வாங்கப் பட்டனர்.

**5. இணையத்தள உபகுழு**

வைத்திய கலாநிதி சிவாகரன்
வைத்திய கலாநிதி ப. நந்தகுமார்
திரு.கு.அமரேஸ்

**6. 125 வது ஆண்டு அபிவிருத்திப் பணிகளுக்கான நிதிசேகரிப்பு உபகுழு**

வைத்திய கலாநிதி ப. நந்தகுமார்
திரு.கு. அமரேஸ்

**7. சிரமதானப்பணி உபகுழு**

திரு.கு.அமரேஸ்
திரு.செ.விநோத்குமார்
திரு.லி.கேதீஸ்வரன்
திரு.மு.கணேசராஜா

**8. நூதன சாலை உபகுழு**

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர் கா.குகபாலன்
கலாநிதி கு.திருக்குமரன்
திரு.லி.கேதீஸ்வரன்
திரு.வை.சுரேஸ்
வைத்தியகலாநிதி ப.நந்தகுமார்

**9. கட்டடநிர்மாண உபகுழு**

சைக்கிள் பாதுகாப்பு நிலையம்
திரு.மு.கணேசராஜா
திரு.வை.சுரேஸ்
திரு.செ.விநோத்குமார்

**10. சபாலிங்கம் கலையரங்கு உபகுழு**

திரு.மு.கணேசராஜா
திரு.பொ.தயானந்தன்
கலாநிதி கு.திருக்குமரன்

இக்குழுவிலிருந்து திரு. மு.கணேசராஜா விலகிக்கொண்டார். அவருக்குப் பதிலாக திரு.கு. அமரேஸ் உள்வாங்கப்பட்டார்.

அதிபர், தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் பதவி வழியாக இவ் உபகுழுக்கள் அனைத்திலும் இணைத்துக் கொள்ளப் பட்டனர்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**
**பழைய மாணவர் சங்கம்**
**செயலாளர் அறிக்கை.**

## வருடாந்த பொதுக் கூட்டம்
## 01.02.2015

*இந்து அன்னையின் தனயர்களே !*
*அனைவருக்கும் இனிய வந்தனங்கள்*

*எமது அன்னையின் உயர்ச்சியையே உன்னத இலக்காகக் கொண்டு நீங்கள் அனைவரும் இங்கே ஆவலோடு வருகை தந்திருப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.*

*எமது ஆட்சிக்குழுவானது 20.10.2013 அன்று பதவியேற்று இன்று 01.02.2015 அன்று எமது ஆட்சிக்காலத்தை நிறைவு செய்கின்றது. எமது 15 மாத ஆட்சிக் காலப் பகுதியில் எம்மால் அன்னையின் நலனுக்காக முன்னெடுக்கப்பட்ட செயற் பணிகளை செயலாளர் அறிக்கை வாயிலாக இங்கே பதிவு செய்கின்றேன். எமது யாப்பிற்கு அமைவாக வருடாந்தப் பொதுக் கூட்டத்தை இன்று கூட்டியிருக்கின்றோம்.*

*எமது ஆட்சிக் காலப்பகுதியில் 15 ஆட்சிக்குழுக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. மூன்று விசேட பொதுக் குழுக் கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன. புதிய அதிபரின் வருகை, எமது கல்லூரியில் ஜனாதிபதியின் விஜயம் மற்றும் எமது கல்லூரி அன்னையின் 125 ஆவது ஆண்டு நிகழ்வுகள் ஆகியவற்றை ஒட்டியே விசேட கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன.*

*எமது ஆட்சிக்குழுக் காலப்பகுதியில் அன்னையின் வளர்ச் சிக்கும், உயர்ச்சிக்குமாக முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களை யும், செயற்பாடுகளையும் இவ் அறிக்கையினூடாக இங்கே முன் வைக்கின்றேன்.*

## எமது ஆட்சிக்குழுக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களும் செயற்பாடுகளும்.

**விளையாட்டுத் துறை :-**

✎ எமது கல்லூரியின் விளையாட்டுத்துறையினை வினைத் திறனுடன் செயற்படுத்துவதற்காக எமது சங்கத்தால் உபகுழு ஒன்று அமைக்கப்பட்டது.

✎ கூடைப் பந்தாட்ட அணிக்காக எமது சங்த்தால் ரூபா 44,775/= வழங்கப்பட்டது. அத்துடன் இவ்வணியின் பயிற்றுனருக்கான நிலுவை ரூபா 33,000/=இனையும் எமது சங்கம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

✎ கூடைப்பந்தாட்ட பயிற்சியாளருக்கான பயிற்றுனர் வேதனமாக ரூபா 15,000/= எமது சங்கத்தால் வழங்கப்பட்டது.

✎ பளுதூக்கும் அணியை ஊக்குவிக்கும் முகமாக ரூபா 28,850/= பெறுமதியான ஊட்டச்சத்து உணவுப் பைக்கற்றுக்கள் வழங்கப் பட்டன. இவ் அணி தேசிய ரீதியில் பல சாதனைகளை நிகழ்த்தி யமை குறிப்பிடத்தக்கது.

✎ எமது பழைய மாணவர் சங்கத்தினூடாக எமது கல்லூரியின் கராத்தே அணிக்கு 88ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பிரிவு மாணவர்களால் ரூபா 10,000/= நேரடியாக அன்பளிப்புச் செய்யப் பட்டது. இதற்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

✎ எமது பழைய மாணவன் திரு.க. செவ்வேள் அவர்கள் தேசிய ரீதியில் சாதனைகளை நிகழ்த்திய பளுதூக்கும் அணிக்காக ரூபா 20,000/= இனை எமது சங்கத்தினூடாக அன்பளிப்புச் செய்திருந்தார். அவருக்கும் எமது நன்றிகள்.

✎ எமது சங்கத்தினூடாக சிவானந்தராஜா சிவப்பிருந்தன் இரண்டு கரம் போர்ட்டுக்களை கல்லூரிக்காக அன்பளிப்புச் செய்திருந்தார் அவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

✎ எமது கல்லூரிக்கும், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்ட போட்டியின் போது வீரர்களுக்கான

காலை உணவு மற்றும் இரவு உணவிற்கான செலவீனங்களைப் பொறுப்பேற்று நிறைவேற்றியிருந்தோம்.

எமது கல்லூரியின் சதுரங்க வீரர்களை சிறப்பாக தயார் படுத்து வதற்காக கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் சதுரங்க வீரர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றை நிகழ்த்தியிருக் கின்றோம். இதன் வளவாளராக எமது கல்லூரியின் பழைய மாணவர் கலாநிதி. அம்பாலவாணர் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். அவருக்கும் இதனை ஒழுங்கமைத்த கொழும்பு பழைய மாணவர் சங்கத்திற்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

**தளபாடங்கள் திருத்தம்**

எமது கல்லூரியினுடைய தளபாடங்கள் பல சேதமுற்ற நிலையில் காணப்பட்டன. இந்தத் தளபாடங்களை எமது ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. மு. கணேசராஜா அவர்கள் ரூ 60.000 செலவிட்டு சீரமைத்துத் தந்திருந்தார். இதற்கு கல்லூரியின் சார்பாகவும் சங்கத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வேதனம்**

கல்லூரி ஓட்டோ சாரதி மற்றும் ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை ஆகியோருக்கான வேதனம் , எமது பழைய மாணவர் சங்கமே தொடர்ச்சியாக வழங்கிவந்துள்ளது.

## கட்டுமானப் பணிகள்

**துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் :-**

கனடா பழைய மாணவர் சங்கத்தின் அனுசரனையில் எமது கல்லூரியின் குமாரசுவாமி மண்டபப் பக்கமாக 200 அடி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டது. ரூபா 833624/= செலவிலான இப்பணியை கனடா பழைய மாணவர் சங்கம் எமது சங்கத்தினூடாக முன்னெடுத்திருந்தது. கனடா பழைய மாணவர் சங்கத்திற்கு எமது சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மதில்**

எமது கல்லூரியின் முன்வாயிலில் புதிதாக மதில் ஒன்று அமைக்கப் பட்டது. இதன் முதற்கட்டமாக மதிலைச் சூழவுள்ள குப்பைகள் முற்றுமுழுதாக அகற்றப்பட்டது. இதற்காக ரூபா 1 இலட்சம் பெறுமதியான வேலையை எமது பழைய மாணவர் சங்க உபபொருளாளர் திரு. செ. விநோத்குமார் அவர்கள் இலவசமாக

நிறைவேற்றியிருந்தார். இதற்காக அவரிற்கு நன்றிகளை தெரிவிக்கின்றோம். மேலும் ரூபா 8,97,000 /= பெறுமதியான மதிலானது சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு சட்டவேலி (கிறில்கேட்) போடப்பட்டது. இதனை நிறைவேற்ற உதவிபுரிந்த கனடா பழைய மாணவர் சங்கத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

**சபாலிங்கம் கட்டடத் தொகுதி :-**

எமது கல்லூரியின் புகழ்பூத்த முன்னை நாள் அதிபர்களில் ஒருவரான திரு.சபாலிங்கம் அவர்களின் பெயரில் கலையரங்கம் ஒன்றை அமைப்பது எனவும் அவரது சேவையை பாராட்டும் முகமாகவும் அவரைக் கௌரவிக்கும் முகமாகவும் கலையரங்கம் அமைக்கப்படவுள்ள கட்டத்தொகுதிக்கு சபாலிங்கம் கட்டத் தொகுதி எனப் பெயரிடுவது எனவும் ஆட்சிக் குழுவால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக வைத்தியக்கலாநிதி சபாலிங்கம் ஜோதிலிங்கம் அவர்களின் அன்பளிப்புப் பணத்தினைப் பெற்றுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டு இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும், கண்காணிப்பதற்கும் உபகுழு ஒன்று அமைக்கப்பட்டு இவ்வேலைத்திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. அதற்காக இதுவரை ரூபா 9 மில்லியன் வைத்திய கலாநிதி ஜோதிலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. கலையரங்கு நிர்மாணப்பணிகள் நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது. இதற்காக வைத்திய கலாநிதி ஜோதிலிங்கம் அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**விடுதி :-**

எமது கல்லூரியின் பாரம்பரியம்மிக்க விடுதியை சிறப்பாக இயங்க வைப்பதற்காகவும் விடுதி தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் உபகுழு அமைக்கப்பட்டது.

வன்னி மாவட்டம் உள்ளிட்ட தாய், தந்தையரை இழந்த மிகவும் வறிய நிலையிலுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை எமது கல்லூரியில் உள்வாங்கி அவர்களை விடுதியில் தங்க வைத்து கல்வியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எமது சங்கத்தால் எடுக்கப்பட்டது. இதன்போது 6 மாணவர்கள் உள் வாங்கப்பட்டு தற்போது கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கான தேவைகள் யாவும் விடுதி நிதியத்தின் வட்டிப் பணத்திலிருந்து நிறைவேற்றப்படுகின்றன. இதுவரை ரூ 2,15000/= இம் மாணவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ளது. தற்போது மொத்தமாக 41 மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி

பெறுகின்றனர். ஒரு தசாப்த காலத்திற்கு மேலாகப் பயன்படுத்தப் படாத விடுதி நிதியத்தின் வட்டிப்பணம் முதன்முதலாக எமது ஆட்சிக்குழு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டமை சிறப்பம்ச மாகும்.

✎ விடுதி மாணவர் உதவிநிதி என்ற தலைபபில் திட்டம் ஆரம்பிக்கப் பட்டு அது தொடர்பான ஒழுங்கு முறைமையின் ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வரைபு ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பொதுச்சபையில் அங்கீகரிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

✎ விடுதியில் வசிக்கும் கல்லூரி மாணவர்களது நலனைக் கருத்திற் கொண்டு பிரதி வெள்ளிக்கிழமைதோறும் காலை **6** மணி தொடக்கம் **7** மணி வரை நல்லூர் ஆலயத்தில் கூட்டுப் பிராத் தனைக்கான ஏற்பாடு எம்மால் செய்யப்பட்டது. இதில் எமது மாணவர்கள் சிறப்பாக கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்த பஜனையின் காரணமாக எமது மாணவர்கள் சைவ மகாசபையால் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட பழைய மாணவர் திரு.அ.விக்கினேஸ்வரன் எமது ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. வி. கேதீஸ்வரன் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

✎ அதிபரின் வேண்டுகோளிற்கும்,விருப்பிற்கும் அமைய திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை **6** மணிக்கு யோகாசன வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக பயிற்சியாளர் ஒருவரை எமது ஆட்சிக் குழு உபசெயலாளர் வைத்திய கலாநிதி ப. நந்தகுமார் அவர்கள் நியமித்திருந்தார். அவரிற்கும் இத்தருணத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

✎ எமது ஆட்சிக்குழுவின் உபதலைவர்களுள் ஒருவரான பேரா சிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ரூ 45000 பெறுமதி யான கட்டில் மற்றும் மெத்தைகளை விடுதி மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். அவருக்கும் இவ்வேளையில் நன்றி பகர்கின்றோம்.

**விழிப்புணர்வுநடவடிக்கையும் மருத்துவ முகாமும்**

பாடசாலை ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுக்கான ஆரோக்கியமான வாழ்வியல் தொடர்பில் கருத்துரைகளும் விழிப் புணர்வு நடவடிக்கைகளும் மருத்துவ பரிசோதனைகளும் எமது ஆட்சிக்குழுவில் அங்கத்துவம் வகிக்கின்ற வைத்தியக் கலாநிதிகளால் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டன. இதற்காக எமது ஆட்சிக்குழுவின் அங்கத்தவர்களாகிய வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன், வைத்திய நிபுணர் தி.சிறிகரன் ஆகியோருக்கு இதனைச் சிறப்பான முறையில் மேற்கொண்டமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாணவர் கௌரவிப்பு**

தேசிய ரீதியில் சாதனைகளை நிலைநாட்டிய எமது கல்லூரியின் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வினை எமது கல்லூரியில் நிகழ்த்தி யிருந்தோம். இதன்போது க.பொ.த உயர்தரம் மற்றும் தமிழ்த்தினப் போட்டிகள் போன்றவற்றில் தேசியளவில் சாதனைகளைப்புரிந்த 28 மாணவர்களுக்கு பதக்கங்களும் தலா ரூ 1000 பெறுமதியான பணப் பரிசில்களும் வழங்கப்பட்டது. இதற்கு அனுசரணை வழங்கிய 88 ம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கும் இணைப்பாளராக செயற்பட்ட எமது ஆட்சிக்குழு உறுப்பினர் வைத்திய கலாநிதி தி. சிறிகரன் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள் ளோம். இம்முறையும் இதனை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள் ளோம்.

**முழுநிலா நாள் கருத்தரங்கு :-**

கடந்த காலங்களில் எமது பழைய மாணவர் சங்க ஆட்சிக் குழுக்களால் நிகழ்த்தப்பட்டு வந்த முழுநிலா நாள் கருத்தரங்கு நிகழ்வுகள் சிறிது காலம் உறங்குநிலையில் இருந்தன. எமது ஆட்சிக்குழு பதவியேற்றவுடன் மீளவும் இதனை இயங்கு நிலைக்கு கொண்டு வந்தோம். இதற்காகவும் உபகுழு அமைக்கப்பட்டு ஏழு கருத்தரங்கு நிகழ்வுகளையும் ஒரு சிறப்புப்பட்டிமன்ற நிகழ்வினை யும் ஏற்பாடு செய்திருந்தோம். இதனை பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்கும் பங்குபற்றுனர்களுக்கான தேநீர் உபசார செலவுகளை வழங்குவதற்கும் உதவிய அனுசரணையாளரிற்கும் இவ்விடத்தில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம். அனுசரணை வழங்கிய Northern Pc Park உரிமையாளர், நவகலா உரிமையாளர், சாரங்கா நகைமாட உரிமையாளர் ஆகியோருக்கு நன்றிகள் எமது மனமார்ந்த நன்றிகள்.

கருத்தரங்கு நிகழ்வுகள் தொடர்பான விபரம் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

**இணையத்தளம்**

எமது பழைய மாணவா சங்க இணையத்தளத்தினை செயற்படுத்து வதற்காக உபகுழு ஒன்று அமைக்கப்பட்டது. இணையத்தளம் சிறப்பாகவும், பூரணமாகவும் வடிவமைக்கப்பட்டது. இதனைச் சிறப்பாக வடிவமைத்துத்தந்த எமது பழைய மாணவன் திரு. செ. கதிர்காமநாதன் அவர்களிற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**யாப்பு சீர்திருத்தம்**

எமது பழைய மாணவர் சங்க யாப்பினைச் சீர்திருத்தம் செய்வதற்காக உபகுழு ஒன்று அமைக்கப்பட்டது. குறைந்த பட்சம் பொருத்தமான, ஆக்கபூர்வமான சில பிரேணைகளையாவது யாப்பில் உள்ளடக்கவேண்டும் என்ற அடிப்படையில் இது தொடர் பான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வந்தபோதும் இதனை பூரணப்படுத்த முடியவில்லை . எனவே இது தொடர்பான வரைபை பொதுக்குழுவினூடாக அடுத்த ஆட்சிக்குழுவிடம் கையளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**சிரமதானப் பணிகள்**

அதிபர் புதிதாகப் பதவியேற்றுக் கொண்டதும், எமது கல்லூரியினுள் சிரமதானப்பணிகளை முன்னெடுப்பதற்கான பாரிய தேவை இருப்பதாகக் குறிப்பிட்டார். இதனடிப்படையில் 06.09.2014 , 08.09.2014 ஆகிய தினங்களில் எமது கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தால் பாரிய சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டது. இந்த சிரமதானப் பணிகளில் எமது கல்லூரியின் அதிபர் , ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் உற்சாகத் துடன் பங்கு பற்றியிருந்தனர். இதற்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். செவ்வனே செய்து முடிக்கப்பட்ட இச் சிரமதானப்பணிக்கான செலவீனமாக ரூ 95,450/= எம்மால் வழங்கப் பட்டிருந்தது. இதற்கான நிதிப்பங்களிப்பை செய்த பழைய மாணவர்க ளிற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதனை முன்னெடுத்த எமது ஆட்சிக்குழுவின் திரு. செ. விநோத்குமார், திரு. கு. அமரேஸ் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**நூதனசாலையும் அரும்பொருட்காட்சியகமும்**

எமது கல்லூரியில் நூதனசாலை ஒன்றை அமைக்கவேண்டும் என்ற பேரவா எம்முள் எழுந்தது. இதற்காக எமது கல்லூரி இந்து இளைஞர் கழகத்துடன் இணைந்து கடந்த **05.09.2014** அன்று அங்குரார்ப்பண நிகழ்வொன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பணிகள் எதிர்வரும் ஆட்சிகுழுவினரால் சிறப்பாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

**125வது ஆண்டு அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி சேகரிப்பு**

எமது அன்னை **125** ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் எமது தாய்ச்சங்கம் அன்னையின் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதிச்சேகரிப்பில் ஈடுபடவேண்டும் என்ற நல்லெண்ணம் மேலோங்கியது. எனவே இதற்காக ஒரு உபகுழு அமைக்கப் பட்டதுடன் ரூ.1000 பெறுமதியான 3000 டிக்கற்றுகளும் மற்றும் ரூ 5000 பெறுமதியான 200 டிக்கற்றுக்களும் " நண்பர்களுக்கு மட்டும்" என்றவாறாக அச்சடிக்கப்பட்டது. இதுவரை எம்மால் ரூ 3,78000/= சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்தருணத்தில் டிக்கற்றுக்களை வாங்கி அன்னையின் உயர்ச்சிக்கு வழிசமைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபரால், எமது **125** ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகளை செவ்வனே நடாத்துவதற்கு எமது ஆட்சிக்குழு அங்கத்தவர்களின் பங்களிப்பும் பிரசன்னமும் அவசியம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்காக எமது ஆட்சிக்குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர், அடங்கலாக திரு.மு. கணேசராஜா, வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன், கலாநிதி. கு.திருக்குமரன், திரு.த. அருணகிரிநாதன், பேராசிரியர் கா.குகபாலன், வைத்திய கலாநிதி ப .நந்தகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

**நூலகம்**

எமது கல்லூரியின் நூலகத்திற்காக இலண்டன் பழைய மாணவர் சங்கம் முதற்கட்டமாக ரூ 10 லட்சத்தினை எமது சங்கத்தினூடாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிதியானது நூலகத்தின் தளபாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக இலண்டன் பழைய மாணவர் சங்கத்திற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### குமாரசுவாமி மண்டபத்திற்கான கதிரைகள்

குமாரசுவாமி மண்டபத்திற்கு 1000 கதிரைகளை 89 ஆம் ஆண்டு க. பொ.த உயர்தர மாணவர்கள் எமது சங்கத்தினூடாக வழங்க வுள்ளதாக தெரிவித்துள்ளனர். இப்பணிக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### போட்டோ பிரதி இயந்திரம்

எமது கல்லூரி மாணவர்களும் , ஆசிரியர்களும் போட்டோ பிரதியாக்கம் செய்வதற்கு பாடசாலைச்சூழலுக்கு வெளியே செல்லவேண்டியநிலை காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. இச்சிரமத்தினை தீர்க்கும் முகமாக எமது சங்க காரியாலய அறையினுள் ஒரு போட்டோ பிரதி இயந்திரம் வைக்கப்பட்டது. இரண்டு பக்கங்களுக்குமாக ரூ 2 அறவிட்டு போட்டோ பிரதியாக்க நடவடிக்கை எமது காரியாலய இலிகிதரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### புதிய அங்கத்தவர்களின் உள்வாங்குகை

எமது ஆட்சிக்குழுக் காலப்பகுதியில் சுமார் 100 வரையிலான அங்கத்தவர்கள் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இதற்காக நாம் பதவியேற்றுக் கொண்டதும் ஏலவே இருந்த விண்ணப்ப படிவத்தை மீள்சீரமைத்து புதிதான விண்ணப்பப் படிவத்தை கொண்ட புத்தகங்கள் பலவற்றை தயாரித்திருந்தோம். புதிய அங்கத்தவர்கள் இணைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட ஆட்சிக்குழு அங்கத்தவர்கள் அடங்கலான அனைத்து நண்பர்களுக் கும் இத்தருணத்தில் நன்றி பகர்கின்றோம். தொடர்ந்தும் புதிய அங்கத்தவர்களின் இணைவை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

### ஆட்சிக்குழு கூட்ட செலவீனங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள்

எமது ஆட்சிக்குழு கூட்டத்திற்கான காகி தாதிச்செலவுகள், தேநீர் உபசரணைச் செலவுகள் போன்றவற்றை எதிர்கொள்வதற்காக எமது ஆட்சிக்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் தலா ரூ 7000/= இனை வழங்கியிருந்தனர். இதனைக்கொண்டே மேற்போன்ற செலவீனங் கள் எதிர்கொள்ளப்பட்டது. எமது காரியாலய இலிகிதருக்கான வேதனம் ரூ 5,300 இனையும் இதனூடாகவே வழங்கியிருந்தோம் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவதுடன் எமது ஆட்சிக்குழு உறுப் பினர்கள் அனைவருக்கும் இவ் ஒத்துழைப்பிற்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*20.10. 2013 அன்று நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் முன்னைய கணக்குகளை செம்மைப்படுத்துவதற்காக, நேர்சீர் செய்வதற்காக மூவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதன் அழைப்பாளராக திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு. ந.வித்தியாதரன், திரு.ச.அச்சுதன் ஆகியோரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். கணக்கு விபரம் சம்பந்தமாக 15.04.2014 அன்று செயலாளரால் அனுப்பப் பட்ட கடிதத்திற்கு தமக்கு 5 மாதகால அவகாசம் தருமாறு அழைப்பாள ரினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. பின்னர் 30. 07.2014 அன்று அவர்கள் தாங்கள் மேற்கொண்ட கணக்கு விபர ஆய்வு மற்றும் சிபாரிசுகள் அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பினர்.*

*இதன் பிரகாரம் 26.10.2014 அன்று இது தொடர்பான விசேட பொதுக்குழுகூட்டத்தை நடாத்துவதற்கு மூவரிடமும் சம்மதம் பெற்றுக் கொண்டோம். இருப்பினும் அக்கூட்டத்தை நடாத்தினால் சில சட்டச் சிக்கல்கள் எதிர்கொள்ளநேரிடும் என செயலாளருக்கு தலைவர் அவர்களினால் மின்னஞ்சல் ஒன்று அனுப்பப்பட்டது. இதனையடுத்து ஆட்சிக்குழுக்கூட்டத்தில் இது தொடர்பில் பிரஸ் தாபிக்கப்பட்டு மீண்டும் 29.11.2014 கூட்டத்தைக் கூட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டபோதும் அன்றையதினத்தில் கூட்டத்தினை தன்னுடைய வேலைப்பளுவின் காரணமாக நடாத்தமுடியாது ள்ளது என இதன் அழைப்பாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் தெரிவித்திருந்தார். எனவே மீண்டும் 18.01.2015 அன்று கூட்டத்தை நாடத்துவதற்கு அனுமதி கோரி அழைப்பாளரிற்கு கடிதம் அனுப் பப்பட்டது. அன்றைய தினமும் தனது சுகவீனம் காரணமாக சில நாட்களுக்கு கூட்டத்தை நடாத்த முடியாது என அழைப்பாளர் அவர்களால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

"எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எமது அன்னை நின்னலம் மறவோம்"

# நன்றி

எமது ஆட்சிக்குழுக் காலப்பகுதியில் எமக்கு பல்வேறு வகையிலும் உதவிபுரிந்த கல்லூரி முன்னாள் அதிபர், இந்நாள் அதிபர், ஆசிரியர்கள் ஏனைய ஆளணியினர், பழைய மாணவர்கள் ஏனைய கிளைச் சங்கங்கள் மற்றும் ஆதரவாளர்கள், வேண்டியபோதெல்லாம் பயன் மிக்க கருத்துக்களை வழங்கி எமது ஆட்சிக்குழுவை வழிநடாத்திய தலைவர், உபதலைவர்கள் மற்றும் ஆட்சிக்குழு அங்கத்தவர்கள் உள்ளிட்ட அனைத்து வகையிலும் ஆதரவளித்த அனைத்து நல் உள்ளங்களிற்கும் எனது இதய பூர்வமான நன்றிகள்.

**சகோதரரே!**

தூய்மையான கரங்களோடும், நேர்மையான நெஞ்சோடும் பதவியேற்றுக்கொண்ட நாம் எமது ஆட்சிக்குழுக் காலப்பகுதியில் சிந்தித்தவையும் சந்தித்தவையும் ஏராளம். சாதித்தது என்னவோ சொற்பம்தான். மகாபாரதத்தில் அர்ச்சுனருக்கு கிளியின் கழுத்து தெரிந்தது போன்று எமது இலக்கு அன்னையின் உயர்ச்சியும், வளர்ச்சியும் மட்டுமே. உலகெங்கும் வியாபித்திருக்கும் அன்னையின் சாதனைப்புதல்வர்களும் கிளைச்சங்கங்களும் அன்னையின் உன்னத பிரசவங்கள். எமது கல்லூரி அன்னையை எமது சுயநலத்திற்காகவும் தனிப்பட்ட பகைமைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் பயன்படுத்தும் நிலையை அடியோடு வெறுப்போம். எமது குறுகிய மனப்பான்மைகளுக்காக இந்துத்தாயின் பொது நன்மையை அடகு வைக்க ஒரு போதும் இடமளியாது இருப்போம்.

எமது அன்னையின் வளர்ச்சிக்கு செய்யவேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. ஒரே தாயின் பிள்ளைகளாகிய நாம் எமக்குள்ளே முரண்பட்டுக் கொள்வது வேதனைக்குரியது. சாதனைகளுக்கு களம் அமைத்துத்தந்த, தந்து கொண்டிருக்கின்ற எமது அன்னை 125 ஆவது ஆண்டில் காலடிஎடுத்து வைக்கும் இந்த அழகிய தருணத்தில் மாற்றத்திற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

வெறுமனே இந்துவின் மைந்தர் என்று உதடு வழி உரைக்காது உள்ளார்ந்தமாக அன்னையின் உன்னத நலனுக்காக பாடுபடுவோம். வாருங்கள் நண்பர்களே! மாற்றத்திற்கான நேரம் இது! எமது கல்லூரி ஞானவைரவப் பெருமானின் அருளாட்சியுடனும், நல்லாசியுடனும் தூய பணிகள் தொடரட்டும்.

புதிதாக பதவியேற்கவுள்ள ஆட்சிக்குழு செவ்வனே பணிபுரிய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

கு.கௌதமன்
செயலாளர்

# முழுநிலா நாள் கருத்தரங்கு அட்டவணை

| திகதி | கருத்துத் தலைப்பு | வளவாளர் |
|---|---|---|
| 15.01.2014 | போருக்கு பின்னரான சமூக மாற்றங்கள் | விரிவுரையாளர்<br>இராஜேஸ் கண்ணன் |
| 14.02.2014 | நீரிழிவுடன் நீடித்து வாழ்வது எப்படி? | வைத்திய கலாநிதி<br>தி. ஸ்ரீகரன் |
| 16.03.2014 | காலநிலை மாற்றம் | விரிவுரையாளர்<br>நா. பிரதீபராஜா |
| 14.05.2014 | குடாநாட்டு நீர் மாசடைதலும்<br>அதன் தாக்கங்களும் | வைத்திய கலாநிதி<br>சுரேந்திரகுமார் |
| 12.06.2014 | வள்ளலாரும் ஜீவகாருண்யமும் | வைத்திய கலாநிதி<br>நந்தகுமார் |
| 12.07.2014 | மது போதைப் பொருள் பாவனைக்<br>குறைப்பில் சமூகத்தின் பங்கு | திரு. சிவநாயகம் |
| 06.11.2014 | சிறப்புப் பட்டிமன்றம் | நடுவர்<br>கு. பாலசண்முகன்<br>பங்குபற்றியோர்<br>யாழ் இந்து பழைய மாணவர்கள் |



# வணக்கம்

பாரதி பதிப்பகம். யாழ்ப்பாணம்